# கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டம் (IRDCRP)

# செயற்றிட்ட பணியாளர்களை ஆட்சேர்த்தல்

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டமானது (IRDCRP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் உலக வங்கி என்பன இணைந்து நிதியுதவியளிக்கப்படும் கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் மொத்த செயற்றிட்டச் செலவு 103 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் இது கமத்தொழில், கால்நடை, கடற்றொழில் மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் உள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிலங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் பண்ணை மதிப்புச் சங்கிலியால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த 05 ஆண்டு காலத் திட்டத்தின் பிரதான நோக்கமானது செயற்றிட்டப் பிரதேசங்களில் கமத்தொழில் உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன், போட்டித் தன்மை மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டத்தை மேம்படுத்துவதாகும்.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு (PMU) பின்வரும் (01 மற்றும் 25) ஒப்பந்த அடிப்படையிலான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் 2019 மார்ச் 05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

| No. | Level of Salary Category | Designation | No. of Positions |
|---|---|---|---|
| **Required Cadre for Project Management Unit (PMU)** | | | |
| 1 | PS 3 | Rural Finance Management Specialist | 01 |
| 2 | PS 3 | Value Chain Specialist | 01 |
| 3 | PS 3 | Agri Business Specialist | 01 |
| 4 | PS4 | Internal Auditor | 01 |
| 5 | PS 5 | Senior Technical Officer (Civil) | 01 |
| 6 | PS 5 | Senior Technical Officer (Irrigation) | 01 |
| 7 | PS 5 | MIS Officer | 01 |
| 8 | PS 6 | Project Officer (Rural Finance Management) | 01 |
| 9 | PS 6 | Project Officer (Water Management) | 01 |
| 10 | PS 6 | Project Officer (Monitoring and Evaluation) | 01 |
| 11 | PS 6 | Project Officer (Finance Management) | 01 |
| **Required Cadre for Component 2.1 — Attached to Department of Agrarian Development (DAD)** | | | |
| 12 | PS 2 | Deputy Project Director | 01 |
| 13 | PS 4 | Engineer (CIVIL) | 01 |
| 14 | PS 5 | Senior Technical Officer | 03 |
| 15 | PS 6 | Technical Officer (for 12 Districts & Head office) | 15 |
| 16 | PS 6 | Procurement Officer | 01 |
| 17 | PS 6 | Project Officer (Social Development) | 01 |
| 18 | PS 6 | Project Officer (Environment) | 01 |
| **Required Cadre for Component 2.2 — Attached to Irrigation Department** | | | |
| 19 | PS 2 | Deputy Project Director for all three provinces | 01 |
| 20 | PS 4 | Engineer | 04 |
| 21 | PS 6 | Engineer Assistant | 06 |
| 22 | PS 6 | Draughtsman | 03 |
| **Required Cadre for Component 2.1 — Attached to Provincial Irrigation Department NP/EP and Uva** | | | |
| 23 | PS 2 | Deputy Project Director (for all three provinces) | 01 |
| 24 | PS 5 | Project Coordinators (Senior Development Officer) | 03 |
| 25 | PS 6 | Technical Officer (NP-2 / EP — 2 / Uva — 1) | 05 |

**அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்**

விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 01/2019ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**

- ஒவ்வொரு பதவிக்குமான வயதெல்லை குறிப்பு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- நன்கொடையாளர் நிதியளிப்புத் திட்டத்தில் இதனையொத்த அல்லது உயர்ந்த கொள்ளளவில் வேலை அனுபவம்.
- தேவையைப் பொருத்து ஊழியர்கள் திட்ட வேலைத்தளங்களுக்கு பயணிக்க வேண்டியிருக்கும்.
- ஆங்கிலத்தில் புலமை, கணனி ஆற்றல் மற்றும் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிந்திருத்தல்.
- தொடர்புடைய துறைகளில் உள்ள தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாகும்.
- தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் நேர்காணலுக்காக அழைக்கப்படுவர் என்பதுடன் மேற்கூறிய ஆட்சேர்ப்பு தொடர்பில் கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் மற்றும் உறுதியானதுமாகும்.
- ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும் தங்களது சுய விபரங்கள் (CV) சகிதம் உறவினரல்லாத இரு சான்று பகர்வோர் சகிதம் மற்றும் சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து முகப்புக் கடிதம் சகிதம் தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 2025-12-28ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பவும். இறுதி நாளுக்கு முன் **pmuirdcrp@gmail.com** எனும் முகவரிக்கு மின்னஞ்சலிடவும். மேலும் ***https://forms.gle/88XF2MKp8dXcocg18*** என்ற இணைப்பைப் பயன்படுத்தி கூகுல் தாளை நிரப்பி இறுதி நாளுக்கு முன் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க / அரசு சார்ந்த சேவைகளில் இருந்தால் அவர்களின் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி மற்றும் காலநிலை சீரமைவான திட்டம்**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**மேலதிக தகவல்களுக்கு (பதவி விபரங்கள் / குறிப்பு விதிமுறைகள், அடிப்படைத் தகைமைகள் போன்றன..) மற்றும் தயவு செய்து இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்: (https://www.agrimin.gov.lk)**

**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**